# மணிவிழா வாழ்த்து!

**நாள்:12-04-2023**



இல்லறம் என்னும் நல்லறம் கண்டு,
இனியதாய் இரண்டு மகள்களைப் பெற்று,
இனியவள் மூத்தவள் **இரம்யா** தானும்,
இல்லறம் தொடங்கக் கைத்தலம் பற்றிய,

இனியனுடன் நிறைந்த மகிழ்வுடன் வாழ்ந்து,
இனியதாய் மகவைப் பெறபெயர்த்தி ஆனாள்!
இனிய வாழ்க்கையில் இயைந்து தொடர்ந்திட,
அகவை தாமும் அறுபதைத் தொட,

அன்பில் நிறை **முத்துக் குமார்** அகமகிழ்வில்,
இல்லத்தரசி **இராஜேஸ்வரி**யுடன் இனிதே காணும்,
**மணிவிழா** என்னும் மங்கலப் பெருவிழா!
அணியாய் இன்னும் பெருமைசேர, அடுத்தமகளும்,



நின்றதாம் பெருமையாய் இல்லறம் கண்டிட,
இன்பம் யாவிலும் இணைந்தே மகிழ்ந்திட,
மன்னிய அன்பில் விளைந்த மருவிலா,
அன்பால் நிறைந்து அகம் மகிழ வாழ்த்துவோமே!
அன்புடன்,
**து.ப. அசோகன்& மங்கையர்க்கரசி**
சென்னை – 73
11-04-2023





